## PART-A

1. (a) புளூமன் கற்பித்தல் கோட்பாடுகளை விளக்கி எழுதுக?

கற்பித்தல் நோக்கங்களின் அடிப்படைகளை ஆராய்வதற்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் டாக்டர் பெஞ்சமின் புளூம் என்பவரும் அவரது குழுவினரும் ஆய்வு செய்து வகைத்தொகை விளக்கம் செய்துள்ளனர். அவர்கள் தந்த வகைப்பாட்டில் கல்வி நோக்கங்கள் மூன்று பெரும் பிரிவுகளாக உள்ளன.

அவையாவன :

1. அறிதல் பகுதி (cognitive domain)
2. உணர்தல் பகுதி (Affective domain)
3. உள இயக்கப் பகுதி (psycho-motor-domain)

இவற்றுடன் ஒவ்வொரு வகையிலும் பல உட்கூறுகள் உள்ளன.

அறிதல் பகுதி :- (cognitive domain)

இதில் ஆறு உட்கூறுகள் உள்ளன. அறிதல் என்னும் அடிப்படை நிலையிலிருந்து மதிப்பிடல் எனும் உயர்நிலை வரை அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. அறிதல்
2. புரிந்து கொள்ளுதல்
3. பயன்படுத்துதல்
4. பகுத்தல்
5. தொகுத்தல்
6. மதிப்பிடல் என்பனவாம்.

Scanned by CamScanner

அறிவுசார் வகை என்பது பொதுவாக மாணவரது அறிவினைப் பெருக்குவதும், வளர்ச்சியுறச் செய்தலை ஆகும்.

இதில் கீழ்மட்டத்தில் இருந்து பொருள் அறிவு (knowledge) பெறுதல் என்ற நிலையிலிருந்து அறிவினை புரிந்துகொள்ளுதல் (understanding), பெற்ற அறிவினை புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல் (Application), பகுத்தாராய்தல் (Analysis), தொகுத்தாராய்தல் (Synthesis) என்று படிப்படியாக சென்று இறுதியில் மதிப்பிடுதல் (Evaluation) போன்ற நோக்கங்கள் அடங்கும்.

உணர்தல் பகுதி (Affective domain) (எழுச்சிப் பகுதி).

இப்பிரிவு தொடங்கும் நிலையில் உள்ளது ஏற்றுக் கொள்ளல் உயர்நிலையில் இருப்பது, மனப்பான்மை ஒன்றைப் பண்பாக்கிக் கொள்ளல் ஆகும்.

1. ஏற்றுக்கொள்ளுதல்

2. போற்றுதல்

3. மதித்தல்

4. அமைத்துக் கொள்ளல்

5. பண்பாக்கிக் கொள்ளுதல் என்பனவாம்.

மாணவரது உணர்ச்சிகளை, மனச்சிக்கலை உணர்ப்பதாகும். இப்பகுதியில், அடித்தளத்தில் மாணவரது பாராட்டு உணர்வை (Appreciation), வளர்ச்சித் தொடங்கி, பற்றினை

ஈடுபாடுகள் (interest), மனப்பான்மைகளை (Attitudes) வளர்த்தல், உயர்ந்த எண்ணங்களை பெறுதல் (value system), பண்புகளை வளர்த்தல் (Charactes formation) எனப்படிப்படியாக கற்பிக்கும் நோக்கங்களின் உச்ச நிலையை அடைவதாகும்.

உள இயக்கப்பகுதி (Psycho-motor-domain).

இப்பகுதி புலக்காட்சி என்னும் எளிய நிலையில் தொடங்கி ஒரு திறனை இயல்பாக்கிக் கொள்ளல் என்னும் உயர்நிலையில் முடியும் அவை.

1. புலக்காட்சி பெறுதல்
2. போலச் செய்தல்
3. திறமை பெறுதல்
4. தெளிவான ஒருங்கிணைத்தல்
5. திறமையாக மாற்றியமைத்தல்
6. இயல்பாக்கிக் கொள்ளல் என்பனவாகும்.

மாணவருடைய உளப்பாங்கின் அடிப்படையில் செயற்படும். நரம்பு இயக்கமாகும். இப்பாதையினில் செயற்றூண்டல் (impulsion) என்று தொடங்கி, வினையாற்றல் (manipulation), கட்டுப்பாடு (control) ஒத்திசைவு (co-ordination) என்று செயற்பட்டு இறுதியாக இயற்கை அமைவு (naturalization) என்று முடிகின்றன.

இவையே புளூம் என்பவர் குறிப்பிட்ட கல்வி கற்பித்தல் நோக்கங்களின் மூன்று பெரும் பிரிவுகளும், உட்கூறுகளும் ஆகும். கல்விச் சூழலில் 'அறிதல் நிலை' நோக்கங்கள் பெரும்பான்மையும் அமைவதால் அதனை நன்கறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. அறிதல் பகுதியானது எல்லாக் கற்றலுக்கும் அடிப்படையானது. எனவே கற்பித்தல் நோக்கங்களின் பகுப்பில் முதலிடத்தை வகிக்கின்றது.

---

P-B :-

2. பாடத்திட்டத்தின் படிநிலைகளை விளக்குக.

பாடத்திட்டத்தின் வரிசையமைப்புப் பாடத்திட்டம், அடுக்குப் பாடத்திட்டம், சுழல் பாடத்திட்டம், தேசியப் பாடத்திட்டம், இலட்சியப் பாடத்திட்டம் என பல வகைப்படும்.

வரிசையமைப்புப் பாடத்திட்டம் :-

இப்பாடத் திட்டத்தில் பாடங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாததாகும். மேலும், தன்னளவில் முடிந்துவிடும் தன்மையுடையதாக இருக்கும். ஆனால் இவ்வமைப்பு பாடத்திட்டம் மொழிப்பாடத்திற்கு ஏற்றதன்று. ஏனெனில் மொழித்திறன்களும் நான்கும் ஒன்றினொன்று

Scanned by CamScanner

ஒன்று பிரிக்க இயலாத ஒன்றாகும். பள்ளிமொழிப்பாடத்திட்டத்தில் இந்நான்கு மொழித் திறன்களையும் ஒன்றாக சேர்த்துக் கற்பித்தல் வேண்டும்.

அலகு அடுக்குப் பாடத்திட்டம்:-

இவ்வகைப் பாடத்திட்டத்தில் ஒரு பாடத்தில் புதியதாகக் கற்றுக்கொண்டவை. அவை அடுக்கு அமையும் பாடத்திட்டத்தில் கற்கக்கூடியவைகளுக்கு அடிப்படையாக விளங்கும். இப்பாடத் திட்டத்தில் முதலில் கற்றுத் தரப்பட்டவை பற்றிய குறிப்பு, பின்னால் கற்றுதரப் போவதோடு சேர்ந்தமையும்.

பாடத்திட்டம்:-

தொடக்கக் கல்வி, உயர் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி என ஒவ்வொரு கல்வி நிலையிலும் மாணவர் எந்த அளவு பாட அறிவு பெற்றிருக்க வேண்டும். என்னென்ன செயல்திறன்களை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும், என்னென்ன மனப்பான்மைகளையும் அமையப் பெற்றிருக்க வேண்டும், என்று கல்வி ஏற்பாடு பொதுப்படக் கூறுகின்றது.

சுழல் பாடத்திட்டம்:

இப்பாடத் திட்டத்தின்படி, பாடங்களைக் கற்கும் மாணவன் முந்தைய பாடம் ஒன்றில் தான் தெளிவாகக் கற்கவில்லை என்றால் மீண்டும் அக்குறிப்பிட்ட

Scanned by CamScanner

பாடத்திற்கே செல்லலாம். இம்முறையால் பாடங்களைத் திரும்பத் திரும்பக் கற்கும் பயிற்சி கிடைக்கிறது.

தேசியப் பாடத்திட்டம்:-

இப்பாடத்தின் அடிப்படை, மொழியமைப்புகள் செய்தி பரிமாற்றத்திற்குப் பயன்படும். எங்ஙனம் பல்வேறு மொழி அமைப்புகளின் வழி ஒரு மொழியில் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன என்பதைக் கற்றுத் தருவதே தேசியப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

இலட்சியப் பாடத்திட்டம்:

இலட்சியப் பாடத்திட்டம் என்பது ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியாகப் பாடத்திட்டம் தயாரித்துத் தருவதாகும்.

Scanned by CamScanner

## PART – B

4. ப்ளூமின் மனச்செயல்பாடுகளை விளக்குக.

1949-ம் ஆண்டு பேராசிரியர் பெஞ்சமின் ப்ளூம் (Benjamin Bloom) என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்ட நோக்க வகைப்பாட்டியல் குழு (Taxonomy group), 1956-ம் ஆண்டு, கல்வி நோக்கங்களை அதனதன் முக்கியத்துவத்துக்கேற்றவாறு வகைப்படுத்தப்பட்ட கற்பித்தல் நோக்கங்களை உருவாக்கித் தந்தது. பின்னர் இவைகளே கற்பித்தல் நோக்கங்கள் என அதனதன் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு வரிசைப்படுத்தப்பட்டது.

மேற்கண்ட கல்விக் குழுவானது மூன்று விதமான மனச் செயல்களை வரிசைப்படுத்தியது. அவை.

1. அறிதல் (cognition)
2. செய்தல் (psychomotor)
3. உணர்தல் (Affective)

இதனையே (1) Head, (2) Hand, (3) Heart எனவும் கூறுவர்.

ஒரு மாணவனின் முழுமையான ஆளுமைத் தன்மையானது மேற்கண்ட மூன்று பகுதிகளில் காணலாம்.

1. அறிதல் பகுதி (cognitive)

படித்தல், நினைவுகூர்தல், சிந்தனை செய்தல், சிக்கல் தீர்த்தல், கருத்துகோள் அமைத்தல் போன்றவைகள் மேலாக பெறும் அறிவு அனைத்தும் அறிதல் பகுதியில் அடங்குவனவாகும்.

Scanned by CamScanner

இப்பகுதியில் தான் கற்பித்தல் நோக்கங்களையும் அதற்குரிய மாணவர் நடத்தை மாறுதலையும் அடையாளம் காண முடியும்.

(2) செய்தல் பகுதி:- (Psychomotor).

உடலால் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் இதனுள் அடங்கும். இயந்திரமயப் பணிகள், உடலியல் பயிற்சி, எழுத்துப் பணிகள் போன்றவைகள் இப்பகுதியில் அடங்கும் என்பர்.

(3) உணர்தல் பகுதி (Affective).

உணர்வு சம்பந்தமான நடத்தைகள் அனைத்தும் இப்பகுதியில் அடங்கும். ஆர்வம், மனப்பான்மை, மதிப்புகள், பாராட்டுதல் போன்றவைகள் அனைத்தும் இப்பகுதியைச் சேர்ந்தவை எனலாம்.

ஒரு மாணவன் அறிதல், செய்தல், உணர்தல் ஆகிய மூன்று பகுதியில் ஏற்படுகின்ற வளர்ச்சியே அம்மாணவனின் நடத்தையை ஆள்கிறது.

ஒரு செயலைச் செய்வதற்கான திறன்களைப் பற்றியது அறிதல் பகுதி எனில், அச்செயலைச் செய்வதற்கான ஆசையை (அ) மனப்பான்மையை, உள்ளுணர்வை, உணர்வுப்பகுதி எனலாம்.

இவ்வாறு அறிதல் மற்றும் உணர்வுப் பகுதியானது மனித நடத்தையின் கருத்தடிப்படையான கூறுகளையும், செய்தல் பகுதியானது செயல்முறைக் கூறுகளையும் கொண்டுள்ளது.

கற்றல் அறிதல் பகுதியில் மிக முக்கியப் பங்கு வகிப்பதால் அப்பகுதியில் கற்பித்தல் நோக்கங்களை புளூம் (Bloom) என்ற அறிஞரும் மற்றவர்களும் கீழ்க்கண்டவாறு வகுத்துள்ளனர்.

Scanned by CamScanner

அறிதல் பகுதி :-

↓

அறிவு பெறுதல் (Knowledge)

↓

புரிந்து கொள்ளுதல் (Understanding)

↓

பயன்படுத்துதல் (Application).

↓

பகுத்தாய்தல் (Analysis)

↓

தொகுத்தல் (Synthesis)

↓

மதிப்பீடு செய்தல் (Evaluation).

இதில் கூறியவற்றிலிருந்து அறிதலானது எல்லா கற்றலுக்கும் அடிப்படையானது என்பதும் அது கற்பித்தல் நோக்கங்களின் பகுப்பின் முதலிடத்தை வகிக்கிறது என்பதும் தெளிவாகிறது.

---

5. நல்ல பாடத்திட்டத்தின் நற்பண்புகள் யாவை?

(i) பொதுச் செய்திகள் (General Information).

பள்ளியின் பெயர், ஆசிரியர் பெயர், வகுப்பின் பெயர், கற்பிக்கும் பாடம், பாடத்தலைப்பு, பாட அலகு, மாணவர்கள் எண்ணிக்கை, கால அளவு, தேதி, பாடப்பிரிவேளை போன்ற அனைத்துச் செய்திகளையும் உள்ளடக்கிய தொகுப்பைப் பொதுச் செய்திகள் என்பர்.

Scanned by CamScanner

2. கற்பித்தல் நோக்கங்கள் (அ) நோக்கப் பண்புகள் (Instructional objectives).

மாணவர்களிடத்தில் எத்தகைய நோக்கப் பண்புகளை இப்பாடக் கற்பித்தலின் மூலம், ஏற்படுத்த ஆசிரியர் நினைக்கிறாரோ (அ) திட்டமிடுகிறாரோ அதனை வரிசைப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

3. நோக்கக் கூறுகள் (அ) பண்புக்கூறுகள் (Specifications).

ஆசிரியர் எத்தகைய பண்புகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டுமென நோக்கமாகக் கொண்டுள்ளாரோ, அத்தகைய நோக்கப்பண்பின் திறன் கூறுகளை வரிசையாகக் கொடுக்க வேண்டும். இதனை நோக்கக்கூறுகள் அல்லது பண்புக்கூறுகள் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

4. கற்பித்தல் துணைக்கருவிகள் (Teaching Aids)

கற்றல் - கற்பித்தலை, எளிமையாக்கவும், ஆர்வமுடையதாகச் செய்யவும், திறமையானதாக ஆக்கவும் பாடத்துணைக்கருவிகள் மிகவும் அவசியமானதாகும். பாடத்துணைக்கருவிகள் கற்றலை துரிதப்படுத்துகின்றன. நினைவாற்றல் நீடித்துத் தருகின்றன. எனவே "அதிகம் கற்றல் (More learning) விரைவாகக் கற்றல் (Quick learning) நீடித்த நினைவாற்றல் (Longer retention)" என்பது அறிஞர்களின் கூப்பாடாகும் காட்சிக் கேள்வி மொழிநடை (Slogans).

புலனறிவு அனுபவமே காட்சி அனுபவமாகும். புலன்கள் மூலம் பெறும் கற்றல் அனுபவம், கருத்தடிப்படையில் பெறும் கற்றல் அனுபவத்தைவிட சிறப்பாக வலிமையானதாகும்.

ஆதலால் ஒவ்வொரு பாடத்திற்கும் துணைக்கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. (துணைக் கருவிகளின் முக்கியத்துவம், வகைகள், பயன்கள் தனித்தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

எத்தகைய துணைக் கருவிகளை ஆசிரியர் பயன்படுத்துகிறார் என்பதை இப்பகுதியில் குறிப்பிட வேண்டும்.

5. நான்கு கட்டப் பகுதி (Four columns)

(அ) நோக்கக்கூறுகள் (அ) பண்புக் கூறுகள்.
(ஆ) பாடப்பொருள்
(இ) கற்றல் அனுபவம்
(ஈ) மதிப்பீடு

எ.கா:

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| நோக்கக்கூறு | பாடப் பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |

போன்ற நான்கு கட்டப் பகுதியில் பாடத்தை திட்டமிட்டு பார்க்க வேண்டும்.

நோக்க அடிப்படை பாடத்திட்டமென்பதால் நோக்கப் பணியின் இருமுகக் கூறுகளில் முதல் கூறான நோக்கப் கூறுக்கு முதல் கட்டமும், இரண்டாவது கூறான பாடப் பொருளுக்கு இரண்டாம் கட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது. மூலம் கற்றல் சூழ்நிலை ஏற்படுத்தி பாடப்பொருளின் மாணவர்கள் நடத்தையில் மாறுதல் கொண்டு வருகிறோம். ஆதலால் கற்றல் அனுபவத்திற்கு மூன்றாவது கட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக மாணவரிடம் எதிர் நோக்கிய நடத்தை மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்பதை சோதிக்க வேண்டும் என்பதால் மதிப்பீடு கட்டம் கடைசியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு கட்ட தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

---

6. தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிநிறுவனம் NCERT குறிப்பிடும் கற்பித்தல் நோக்கங்கள் யாவை?

*(N.C.E.R.T) தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சில மாறுதல்களோடு திருத்தியமைத்த கற்பித்தல் நோக்கங்களை வகைப்படுத்திக் கூறியுள்ளது.

1. அறிவு பெறுதல் (knowlege)
2. புரிந்து கொள்ளுதல் (understanding)
3. அறிவினைப் பயன்படுத்துதல் (Application of knowledge)
4. செய்திறன் வளர்த்தல் (practical skill)

பள்ளியில் சேர்ந்த மாணவன் கல்விச் செயல்முறைகளால் தனது நடத்தையில் பல மாற்றங்களைப் பெறுகிறான். இவ்வாறு பள்ளியினின்று வெளிவரும் போது அம்மாணவன் பெற்றுள்ள புதிய நடத்தைகளை இறுதிநிலை நடத்தைகள் (Terminal Behaviour) எனக் கூறுகிறோம்.

ஒவ்வொரு நோக்கமும் இரு கூறுகளாலானது. நோக்கத்தின் ஒரு பகுதியை 'மாறுதல் பகுதி' (kind of change) அ "திறன்பகுதி" Competence part) எனவும். மற்றொரு பகுதியை (Content part) "பாடப்பொருள்" பகுதி எனவும் கூறுவார்.

அறிவு பெறுதல்
(Knowledge)

- பாடப்பொருள் பகுதி (Content part)
- திறன்/மாறுதல் பகுதி (Competence parts/kind of change).

நோக்கப்பண்பின் நடத்தை மாறுதல் பகுதியை, குறிப்பிட்ட மனத்திறன்களின் அடிப்படையில் பல கூறுகளாகப் பிரித்துக் கூறப்படுகிறது. இவ்வாறு மனத்திறன்களின் அடிப்படையில் நோக்கத்தின் மாறுதல் பகுதியைப் பிரித்துப் பல கூறுகளாக கூறப்படுவதை நோக்கக் கூறுகள் (அ) பண்புக்கூறுகள் எனக் கூறலாம்.

Scanned by CamScanner

* விருப்பார்வத்தை வளர்த்தல் (Desirable Interest)

* நல்மனப்பான்மையை வளர்த்தல் (Healthy positive attitude)

எந்த ஒரு பாடத்தைக் கற்பிக்கும் பொழுதும் இதனை ஏன் கற்பிக்கிறோம்? இது எத்தகைய மாற்றத்தை மாணவன் அறிவு பெறுதலில், புரிந்துகொள்ளும் தன்மையில், கற்ற அறிவைப் பயன்படுத்துதலில் ஏற்படுத்துகிறது? என்பதை ஓர் ஆசிரியர் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

மேற்கூறிய கற்பித்தல் நோக்கங்கள் ஆசிரியர்க்கு வகுப்பறைப் பணிகளில் கற்பித்தலிலும், சோதனை செய்வதிலும், பெரிதும் துணை புரிகின்றன. இத்தகைய கற்பித்தல் நோக்கங்களே, கல்வியில் ஒரு மாணவனின் தொடக்கநிலை நடத்தைக்கும் (Entering Behaviour), கற்பித்தலின் இறுதியாக ஏற்படுகின்ற இறுதிநிலை நடத்தைக்கும் (Terminal Behaviour) உள்ள வேறுபாட்டினைத் தீர்மானிக்கின்றன.

ஒரு மாணவன் பள்ளியில் சேரும்பொழுது ஒரு வகையான நடத்தையினைப் பெற்றிருப்பான். அத்தகைய நடத்தையினை தொடக்கநிலை நடத்தை (Entering Behaviour) எனக் கூறுகிறோம்.

Scanned by CamScanner

7. பாடத்திட்டம் தயாரித்தலின் நோக்கம் மற்றும் அவற்றின் பயன்கள் யாவை?

அழகான வீடு கட்டுவதற்கும், வளமான குடும்பத்தை அமைத்துக் கொள்வதற்கும், வீடு கட்டும் திட்டம், குடும்ப நலத்திட்டம் போன்றவைகளைச் செய்கின்றோம். அதைப் போலவே திறமையான கற்பித்தலுக்கும், தெளிவான கற்றல் நடைபெறுவதற்கும் சிறப்பான பாடத்திட்டம் என்பது தேவையானதாகும். மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

ஓர் ஆசிரியர் தெளிவாக பாடத்திட்டத்தைத் தயாரித்து வகுப்புக்குச் செல்லவில்லையானால், அவர் பாடத்தைச் சிறப்பாக கற்பிக்க முடியாது, கற்பித்தலில் வெற்றியையும் காண முடியாது.

"சரியாகப் பாடத்தைத் திட்டமிடாமல் வகுப்பறைக்குச் செல்லுகின்ற ஆசிரியர், எவ்வித நோக்கமுமின்றி, செல்லுமிடமும் தெரியாமல், கடலில் கப்பலைச் செலுத்திச் செல்லும் மாலுமியைப் போன்றவராவார்" என ஓர் அறிஞர் விளக்கம் கூறுகிறார்.

எனவே கற்பித்தல் செயல்முறையில் பாடத்திட்டம் தயாரிப்பது என்பது ஆசிரியர்க்கு ஓர் இன்றியமையாத கடமையாகும்.

Scanned by CamScanner

<u>பயன்கள் :-</u>

* பாடத்திட்டம் என்பது ஓர் ஆசிரியர்க்கு வழிகாட்டியாக அமைகிறது.

* முன்னாலேயே பாடத்திட்டம் தயாரிக்கப்படுவதால், ஓர் ஆசிரியர் அப்பாடத்தைப் பற்றிய முழுமையான அறிவை கற்பிப்பதற்கு முன்னாலேயே தெளிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அனைத்துக் கருத்துகளும் கண்முன் இருப்பது போல் வரிசையாகத் தடையின்றிக் கூற முடிகிறது.

* பாடத்திட்டத்தின் மூலம் கற்பிக்கப்படுகின்ற அறிவு, தெளிவாகவும் எளிமையாகவும் அமைந்து விடுகிறது.

* பாடத்திட்டத்தின் மூலமே, ஓர் ஆசிரியர் அறிவியல் முறையில் வகுப்பறையில் நடந்து கொள்ள முடியும்.

* எளிதானதிலிருந்து கடினமானது; தெரிந்ததிலிருந்து தெரியாதது; காட்சிப் பொருளிலிருந்து கருத்துப் பொருள்; அருகாமையிலிருந்து தூரத்திலுள்ளது போன்ற கற்பித்தல் கோட்பாடுகளைப் பாடத்திட்டத்தின் மூலமே ஓர் ஆசிரியர் வெற்றிகரமாகக் கற்பிக்க முடியும்.

எனவே பாடத்திட்டமிடல் என்பது கற்பித்தலில் ஓர் இன்றியமையாத செயலாகும்.

Scanned by CamScanner

PART-C

8. அலகுத்திட்டம் என்றால் என்ன?

* பகுதிகள் (parts) சேர்ந்து ஒன்றே முழுமை (whole) என்பதாகும்.

* பகுதியை கற்றலில் முக்கிய பங்காற்றுகிறது.

* பகுதியே முழுமையைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

* இக்கொள்கையே 'அலகுத்திட்டம்' (unit plan) உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது.

---

9. பாடக்குறிப்பு விளக்கம் தருக.

* வாரத்திற்குள்ள பாடப்பகுதியை ஒரு நாளில் ஒரு பாடவேளையில் கற்பிக்க வேண்டியதாகப் பிரித்தல் வேண்டும்.

* அவ்வாறு ஒரு பாடவேளையில் கற்பிக்க வேண்டிய பாடப் பொருள் குறித்து விரிவாக எழுதும் குறிப்பு பாடக்குறிப்பு (Notes of lesson) எனப்படும்.

---

10. ஒரு மாணவனின் முழுமையான ஆளுமைத் தன்மையை எவ்வாறு அளவிட முடியும்.

1. அறிதல் (cognition)
2. செய்தல் (psychomotor)
3. உணர்தல் (Affective).

Scanned by CamScanner

இதனையே,

(1) Head, (2) Hand, (3) Heart. எனவும் கூறுவர்.

ஒரு மாணவனின் முழுமையான ஆளுமைத் தன்மையினை மூன்று பகுதிகளில் காணலாம்.

---

11. பாடத்திட்டம் வரையறு? பாடத்திட்டத்தின் இன்றியமையாமை?

<u>பாடத்திட்டம்</u>:

N.L. Bossing என்ற அறிஞர் 'வகுப்பறையில் அடையப் போகின்ற அடைவுகள் மற்றும் செயல்களின் முன் வரைவுக் கூறுகளே பாடத்திட்டம்" எனக் கூறுகிறார்.

அழகான ஒரு கட்டடத்திற்கும், வளமான குடும்பத்தை அமைத்துக் கொள்வதற்கும், ஒரு கட்டடம் திட்டம், குடும்ப நலத்திட்டம் போன்றவைகளை செய்கின்றோம். அதைப்போலவே திறமையான கற்பித்தலுக்கும், தெளிவான கற்றல் அமைவதற்கும், சிறப்பான பாடதிட்டம் என்பது தேவையானதாகும். மேலும் இன்றியமையாத ஒன்றாகும்.

---

12. பாடத்திட்டத்தின் நான்குகட்ட பகுதிகள் என்றால் என்ன? எ.கா. தருக.

<u>நான்குகட்டப் பகுதி</u> (Four Columns)

(அ) நோக்கக் கூறுகள் (ஆ) பண்புக் கூறுகள்.

(இ) பாடப்பொருள்

Scanned by CamScanner

(ஐ) கற்றல் அனுபவம்

(ஈ) மதிப்பீடு.

எ.கா.

| i | (ii) | (iii) | (iv) |
| --- | --- | --- | --- |
| நோக்கங்கள் | பாடப் பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு. |

போன்ற நான்கு கட்டப் பகுதியில் பாடத்தை திட்டமிடுதல் அமைந்திருக்க வேண்டும்.

Scanned by CamScanner